# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

## C.C.No. 47-2025

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 1 | | Examined as : PW 1 | |
| Name | : ராமச்சந்திரன் | Defence | : |
| Father/Husband Name | : கோபால் | Court | : |
| Village | : விளநகர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 55/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 15.10.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் காலை 10.00 மணியளவில் நான் எனது உறவினரை பார்ப்பதற்காக வெளியே சென்றுவிட்ட வீடு திரும்பிய போது எதிரி மாதவன் எனது அம்மா கௌரி, மகன் இஸ்ரவேல் என்பவரையும் தாக்கியதாக எனது மகனும் தாயும் தெரிவித்தனர். எதிரி குடித்துவிட்டு அவரது மனைவியிடம் சண்டை போட்டதால் அவரது மனவைி யாருக்கும் தெரியாமல் கொல்லை புறமாக வந்து எங்கள் வீட்டிற்குள் பதுங்கிகொண்டார். உடனே எதிரி எனது அம்மா மற்றும் மகனிடம் எனது மனைவியை வெளியே அனுப்புமாறு கேட்டார். எங்களுக்கு எதுவும் தெரியாது. உங்கள் மனைவி இங்கு இல்லை என கூறிவிட்டார்கள். எனது மனைவியை நீங்கள் தான் மறைத்து வைத்திருக்கிறீர்கள் என கூறி எனது அம்மாவை பிடித்து இழுத்து கீழே தள்ளி விட்டார். அதில் என் அம்மாவிற்கு இடுப்பு உடைந்துவிட்டது. எனது மகனை கல்லால் வலது முழங்கை முட்டியில் தாக்கிவிட்டார். அதில் அவருக்கு வீக்கம் ஏற்பட்டது. அங்கிருந்து செம்பனார் கோவில் காவல் நிலையம் சென்று எதிரி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அந்த **புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநான் எனது தாயை மயிலாடுதுறை அரசு

மருத்துவனையில் சிகிச்கைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவர் 1 வாரம் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்திற்கு பிறகு 8 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. மறுநாளே புகார் கொடுத்தேன். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி எனது மகனை கல்லால் தாக்கிய விபரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் எதிரியும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்கனவே முன்விரோதம் உள்ளதா என்றால் உள்ளது. எனது அம்மாவிற்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதன்பிறகு தான் அவர்கள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரி எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் மீது உள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரியின் மீது பொய்யான புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 47-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 4 | | Examined as : PW 2 | |
| Name | : அர்ஜீணன் | Defence | : |
| Father/Husband Name | : தொப்பலான் | Court | : |
| Village | : விளநகர் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 63/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 15.10.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை (U/s 355 of BNSS petition filed and allowed)

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரியையும் அசா1ஐயும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 15.12.2022ம் தேதி காலை 10.00 மணியளவில் பட்டியல் சாட்சிகள் கௌரி மற்றும் இஸ்ரவேல் அவர்கள் வீட்டில் இருந்த போது எதிரி குடித்துவிட்டு வந்து அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டியும், கௌரி என்பவரின் ஜாக்கெட்டை பிடித்து இழுத்து கீழே தள்ளி தாக்கினார் என்றாலும், இஸ்ரவேலை கையால் கன்னத்தில்அறைந்து கீழே தள்ளினார் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்கள் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**